**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8007138

1. District : கிருஷ்ணகிரி மாவட்டம் | PS: V&AC காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 2/AC/2019 மு.த.அ. எண் | Date: நாள் 19.02.19

2. (i) Act சட்டம்: 41 r/w 102 குவிமுச. Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 18.02.2019 ம் தேதி மாலை

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 1900 மணிக்கு முன்பாக.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
கிருஷ்ணகிரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் சுமார் 5 Km. கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P S : District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : தெ.வே. கிருஷ்ணா ராஜன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்

(b) Father's/ Husband's Name : P. வேமராயன்
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. P. கண்ணன், உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி உட்கோட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

* GCP 240-34(Type 2) 90 000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 19.2.19

[signature] 19.2.19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.02.19 / 0600 Hrs.

Name: பெயர் கே. வே. கிருஷ்ணா ராஜன்
Rank: நிலை …………………No. எண் ……….
காவல் துணை கண்காணிப்பாளர்

**கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.2/AC/2019 u/s 41 உ/இ 102 குவிமுச வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி**

18.02.2019 ஆம் தேதியன்று மாலையில் கிருஷ்ணகிரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்துவரும் திரு.P.கண்ணன் அவர்கள் பணிமாறுதலில் செல்வதை முன்னிட்டு அவருடைய கட்டுப்பாட்டில் பணிபுரிந்து வரும் காவல் அலுவலர்களிடமிருந்தும், மற்றும் பிற நபர்களிடமிருந்தும் வெகுமதியாக அதிகபடியான தொகைகள் அவருடைய முகாம் அலுவலகத்தில் வைத்து வசூல் செய்வதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின்பேரில் அவருடைய முகாம் அலுவலகத்தை திடீர் தனிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலக கண்காணிப்பாளர் திரு.ந.வேலு, கியூ பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.வி.அல்லா பகஷ் பாஷா மற்றும் பேரிடர் மேலான்மை பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.ச.புஷ்பலதா ஆகியோர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 18.02.2019 ஆம் தேதி மாலை சுமார் 18.45 மணியளவில் வரவழைக்கப்பட்டனர். அவர்களிடம் திடீர் தணிக்கை மேற்கொள்ளபோகும் விவரத்தை காவல் துணை கண்காணிப்பாளர் விளக்கமாக எடுத்துகூறி பின்னர் மேற்சொன்ன சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினருடன் அரசு நாண்கு சக்கர வாகனத்தில் புறப்பட்டு, மாலை 19.00 மணியளவில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அருகில் உள்ள கிருஷ்ணகிரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்திற்கு சென்று அங்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய துணை கண்காணிப்பாளரின் அறைக்கு செல்லப்பட்டது. அங்கு கிழக்கு முகம் பார்த்தவாறு சாதாரன உடையில் அமர்ந்திருந்த திரு.பி.கண்ணன், துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம், கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் தன்னையும் தன்னுடன் வந்த அரசு சாட்சியையும் அறிமுகம் செய்துகொண்டு திடீர் தணிக்கை மேற்கொள்ள வந்திருப்பதாக அவருக்கு தகவல் தெரிவித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. அவருடைய அறைக்கு வடமேற்கில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலக பணியாளர்களான சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சி.மாரியப்பன், த.கா 797 திருமதி கே.வள்ளிதெய்வாளை, த.கா 1138 திரு.சி.அழகேசன், த.கா 1109 திருமதி.ஜி.கலா, மு.நி.கா 1346 திருமதி.கே.பிரேமா மற்றும் காவலர் 1661 திரு.எஸ்.ஐயப்பன், ஒட்டுநர் ஆகியோர் அலுவலில் இருந்தனர். அவர்களிடமும் திடீர் தணிக்கைக்கு வந்த விவரம் தெரிவிக்கப்பட்டது. அப்போது திரு.பி.கண்ணன், துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், இன்தான் தனக்கு பணிமாறுதல் வந்துள்ளதாகவும் இன்னும் கிருஷ்ணகிரியிலிருந்து பணிவிடுவிப்பாணை வரவில்லை என்றும்

தெரிவித்து திடீர் தணிக்கை மேற்கொள்ள முழு ஒத்துழைப்பு தருவதாக சொன்னார். அவருடைய இருக்கை முழுவதும் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை செய்யப்பட்டது. அதில் கைப்பற்றப்படக்கூடிய தடயங்கள் ஏதுமில்லை. மேலும், அவரிடம் சற்று நேரத்திற்கு முன்பு அவருக்குக் கீழ் பணிபுரியும் காவல் அலுவலர்களிடமிருந்தும் மற்ற நபர்களிடமிருந்து பணம் ஏதேனும் கேட்டு பெற்றுக் கொண்டீர்களா என்று கேட்க, தான் அவ்வாறு பணம் ஏதும் பெறவில்லை என்று சொன்னார். அப்போது கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவருடைய சம்மதத்தின்பேரில் அவருடைய முகாம் அலுவலகத்தின் வட கிழக்கு அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த அறையின் கிழக்கு சுவற்றை ஒட்டி முகம் பார்க்கும் கண்ணாடி அலமாரியில் வெவ்வேறு அளவுகள் கொண்ட சில காக்கி நிற கவர்களும், Promise Quartz Clock என்ற அடையாளம் கொண்ட நீல மற்றும் கருப்பு நிற சிறிய கைப்பை மற்றும் PRIYAN PENS என்ற அடையாளம் கொண்ட, நீலம், மஞ்சள் மற்றும் வெள்ளை நிற பிளாஸ்டிக் கவர் ஒன்றும் இருந்தன. சாட்சிகள் முன்னிலையில், சந்தேகத்தின் அடிப்படையில் அவற்றை சோதனை செய்து பார்க்கையில் கீழ்கண்டவாறு தொகைகள் இருந்தன.

| | | | |
|---|---|---|---|
| 01. | 8"X3 ½ " என்ற அளவிலான காக்கிநிற கவர் | 500 ரூபாய் தாள்கள் 20 எண்ணிக்கை<br>2000 ரூபாய் தாள்கள் 8 எண்ணிக்கை | ரூ.10,000.00<br>ரூ.16,000.00 |
| 02. | 5"X4" என்ற அளவிலான காக்கிநிற கவர் | 500 ரூபாய் தாள்கள் 14 எண்ணிக்கை | ரூ.7,000.00 |
| 03. | 6"X4" என்ற அளவிலான காக்கிநிற கவர் | 500 ரூபாய் தாள்கள் 4 எண்ணிக்கை<br>2000 ரூபாய் தாள்கள் 9 எண்ணிக்கை | ரூ.2,000.00<br>ரூ.18,000.00 |
| 04. | 12"X8" என்ற அளவிலான PRIYAN PENS என்ற அடையாளம் கொண்ட நீலம், மஞ்சள் மற்றும் வெள்ளை நிற பிளாஸ்டிக் கவர் | 500 ரூபாய் தாள்கள் 85 எண்ணிக்கை<br>2000 ரூபாய் தாள்கள் 2 எண்ணிக்கை | ரூ.42,500.00<br>ரூ.4,000.00 |
| 05. | 8½"X4" என்ற அளவிலான காக்கிநிற கவர் | 200 ரூபாய் தாள்கள் 25 எண்ணிக்கை<br>500 ரூபாய் தாள்கள் 5 எண்ணிக்கை | ரூ.5,000.00<br>ரூ.5,000.00 |
| 06. | 8½"X4" என்ற அளவிலான காக்கிநிற கவர் | 500 ரூபாய் தாள்கள் 22 எண்ணிக்கை<br>2000 ரூபாய் தாள்கள் 7 எண்ணிக்கை | ரூ.11,000.00<br>ரூ.14,000.00 |
| 07. | 10"X6" என்ற அளவிலான | 500 ரூபாய் தாள்கள் 300 எண்ணிக்கை | ரூ.1,50,000.00 |

| | | | |
|---|---|---|---|
| | Promise Quartz Clock என்ற அடையாளம் கொண்ட நீல மற்றும் கருப்பு நிற சிறிய கைப்பை. | 2000 ரூபாய் தாள்கள் 75 எண்ணிக்கை | ரூ.1,50,000.00 |

மேற்கண்ட தொகைகள் குறித்து திரு.பி.கண்ணன் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. ஒவ்வொரு கவர்களிலும் எவ்வளவு பணம் இருக்கிறது என்பது குறித்து அவரால் சொல்ல முடியவில்லை. அரசு வாட்சிகள் மூலம் அந்த தொகைகள் ண்ணப்பாத்தபிறகு மீண்டும் அந்த தொகைகள் குறித்து அவரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அப்போத அவர் வ.எண்.1,2,3,5,6 மற்றும் 7 ல் கண்ட தொகைகள் தனது அக்கா முனியம்மாள் தனக்கு கொடுத்ததாக தெரிவித்தார். வ.எண்.4 ல் கண்ட தொகையானது தனது மனைவி திருமதி.சாரதி அவர்கள் தருமபுரியிலிருந்து சீட்டு பணம் எடுத்து செலவுபோக மீதியுள்ள பணம் என்று தெரிவித்தார். அருகிலிருந்த அவருடைய மனைவி திருமதி.சாரதி அவர்களிடம் இது குறித்து கேட்டபோது அதில் எவ்வளவு பணம் உள்ளது என்று அவராலும் சொல்ல முடியவில்லை. அவருடைய அம்மா தனக்கு சீட்டு கட்ட கொடுத்ததாகவும் தெரிவித்தார். மேற்கண்ட தொகைகள் வெவ்வெறு விதமான கவர்களில் வைக்கப்பட்டிருந்த விதம், மேலும் அவர்கள் கொடுத்த விளக்கம் ஆகியவை சந்தேகத்திற்கு இடமளிக்கும் வண்ணம் இடருந்ததாலும் ஏதேனும் குற்றம் செய்தவகையில் அந்த தொகைகள் திரு.பி.கண்ணன் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களால் பெற்றிருக்கக்கூடும் என்று சந்தேகம் கொள்வதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததாலும் மேற்கண்ட தொகை மொத்தம் ரூ.4,34,500.00 அந்தந்த பணம் வைக்கப்பட்டிருந்த கவர்களுடன் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளரால் தொடர் மேல் விசாரணைக்காக சாட்சிகள் முன்னிலையில் இந்த செயல்முறை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அந்த தகவல் உறுதி செய்யும் வகையில் கணக்கில் வராத தொகைகள் கைப்பற்றப்பட்டதால் முகாம் அலுவலகத்தின் மற்ற அறைகள் சோதனைக்குட்படுத்தப்படவில்லை. அந்த செயல்முறை நடவடிக்கையின் போது பணம் வைக்கப்பட்டிருந்த அந்தந்த கவர்களில் இருந்த மொத்த தொகை ரூ.4,34,500.00 தவிர வேறு விலை உயர்ந்த பொருட்களோ, ஆவணங்களோ கைப்பற்றப்படவில்லை. இது தொடர்பாக 18.02.2019 ஆம் தேதி மாலை 19.00 மணிமுதல் 23.00 மணிவரையில் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார்செய்யப்பட்டது. கைப்பற்றப்பட்ட தொகை மற்றும் கவர்களுடன் அலுவலகம் வந்து இன்று 19.02.2019 ஆம் தேதி அதிகாலை 1.00 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 2/AC/2019 u/s 41 உ/இ 102 குவிமுச ன் படி துணை காவல் கண்காணிப்பாளர் திரு.பி.கண்ணன் அவர்களின் மீது வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அசல்,

திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை அறிக்கை மற்றும் கவர்களுடன் கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.4,34,500.00 ஆகியவற்றை கிருஷ்ணகிரி சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் மற்ற நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

(G.V. KIRUSHNA RAJAN)
Dy. Supdt. of Police
Krishnagiri, V&AC.